**Press Release**

## இலங்கையில் பணியாற்றுவதற்கு சிறந்த 25 நிறுவனங்களில் ஒன்றாக எயார்டெல் தரப்படுத்தல்

நிறுவனத்தின் பணியாற்றுவதற்கு பொருத்தமான சூழலை கவனத்தில் கொண்டு, இலங்கையில் பணியாற்றுவதற்கு சிறந்த 25 நிறுவனங்கள் வரிசையில், தொடர்ச்சியான மூன்றாவது ஆண்டாகவும் எயார்டெல் லங்கா தெரிவு செய்யப்பட்டுள்ளது. Great Place to Work Institute இனால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் இந்த தரப்படுத்தல் வழங்கப்பட்டுள்ளது. எயார்டெல் லங்கா தனது ஊழியர்களுக்கும், நிறுவனத்துக்குமிடையே நம்பிக்கை அடிப்படையிலான, வலுவூட்டலுடனான உறவு மற்றும் வெற்றியீட்டக்கூடிய சூத்திரம் ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளது. Great Place to Work ஸ்ரீ லங்கா ஊடாக இரகசியத்தன்மை வாய்ந்த வகையில் ஊழியர் கருத்தாய்வு, ஊழியர் செயற்பாடுகளின் மதிப்பீடுகள் மற்றும் கலாசார மீளாய்வு தொடர்பான ஆய்வுகள் போன்றன நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டு, அவற்றிலிருந்து பெறப்படும் கண்டறிதல்களின் பிரகாரம் இந்த தரப்படுத்தல்கள் வழங்கப்படுகின்றன.

எயார்டெல் லங்கா மனித வளங்கள் பிரிவின் தலைமை அதிகாரி கனிஷ்க ரணவீர கருத்துத் தெரிவிக்கையில், ''செயலாற்றக்கூடிய பணியிடச் சூழல் மற்றும் வளமூட்டும் பணி அனுபவம் ஆகியவற்றை பெற்றுக் கொடுப்பது'' என்பது எயார்டெலின் உறுதி மொழியாக அமைந்துள்ளது. இவை சிறந்த பணியிடமொன்றில் காணப்பட வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த உள்ளம்சங்களாகும். எயார்டெல் ஸ்ரீ லங்காவில் பணியிடச்சூழல் கலாசாரம் என்பது எமது முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடுகளின் ஒரு அங்கமாக அமைந்துள்ளது.'' என்றார்.

'Alive, Inclusive and Respectful' எனும் பெறுமதிகளை கட்டியெழுப்பும் வகையில், எயார்டெலின் கலாசாரம் என்பது பன்முகத்தன்மைக்கு மதிப்பளிப்பதாகவும், அனைவருக்கும் சம வாய்ப்புகளை ஊக்குவிப்பதாகவும் அமைந்துள்ளது. எயார்டெலில் திறந்த அலுவலக கலாசாரம் காணப்படுவதுடன், பிரதம நிறைவேற்று அதிகாரி அதன் ஊழியர்கள் மத்தியில் அமர்ந்துள்ளதனூடாக, ஒன்றிணைந்து செயலாற்றும் கலாசாரம் ஊக்குவிக்கப்படுகின்றது. திறந்த மற்றும் வெளிப்படையான ஊழியர் செயற்பாடுகளினூடாக சமத்துவத்தை நிறுவனம் ஊக்குவிப்பதுடன், சுயாதீன குறைகேள் அதிகாரி ஒருவரையும் கடல்கடந்த பகுதியில் கொண்டுள்ளது.

நிறுவனத்தின் வியாபார மூலோபாயத்தை நிறைவேற்றுவதற்கு பிரத்தியேகமான வழிமுறையை எயார்டெல் வடிவமைத்துள்ளது. இது 22 செயற்பாட்டு திட்ட அணிகளால் முன்னெடுக்கப்படுகின்றன. ஒதுக்கப்பட்ட பிரிவின் மனநிலையிலிருந்து விடுபட்டு, சகல ஊழியர்களுக்கும் ஒன்றிணைந்த இலக்கையும், பொறுப்புக்கூறும் வாய்ந்த வகையிலும் செயற்பாடுகளில் ஈடுபட உதவுவதாக அமைந்துள்ளது.

எயார்டெல் லங்கா முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜினேஷ் ஹெக்டே கருத்துத் தெரிவிக்கையில், "புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றினூடாக தொலைத்தொடர்பாடல் சேவைகளை அனைவருக்கும் பயனுள்ள வகையில் பெற்றுக் கொடுக்கும் வகையில் நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். அந்த நிலையை எய்துவதற்கு, நாம் தொடர்ச்சியாக சிறந்த பணியிடச் சூழலை பேணி வருவதுடன், எதிர்காலத் தேவைகளுக்காக தயாராவது என்பதற்காக நாம் கௌரவிக்கப்பட்டுள்ளோம்.'' என்றார்.

எயார்டெல் தமது ஊழியர்களுக்கு நெகிழ்ச்சியான பணியாற்றல் ஏற்பாடுகளை வழங்கியுள்ளது. இதில் நெகிழ்ச்சியான பணி நேரம், நெகிழ்ச்சியான ஆடைத் தெரிவுகள் மற்றும் விடுமுறை வசதி போன்றன அடங்குகின்றன. பெண்களுக்கு பிரசவசத்தின் பின்னர் 26 வார காலம் விடுமுறை வழங்கப்படுகின்றது, இதற்கு மேலாக பராமரிப்பு விடுமுறைகளும் வழங்கப்படுகின்றன.

நிர்வாகத்தில் பெண்களை ஈடுபடுவதற்கு எயார்டெல் அதிகளவு ஊக்குவிப்பதுடன், நவீன கால பணியாற்றும் பெண்களின் வெவ்வேறு தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும் முன்வந்துள்ளது.

நிறுவனத்தின் மிக அண்மைய செயற்பாடுகளில், மாற்றுத்திறன் படைத்த நபர்களுக்கு பயிற்சி வசதிகள், இலங்கை தொழில் வழங்குநர் சம்மேளனத்துடன் இணைந்து வழங்கியது அடங்கியிருந்தது.

ஜினேஷ் ஹெக்டே மேலும் குறிப்பிடுகையில், ''எமது மாறுபடுத்தும் காரணிகளில் ஒன்றாக எமது ஊழியர்கள் அடங்கியுள்ளனர். துறையில் எமது வெற்றிகரமான செயற்பாட்டுக்கு ஊழியர்களின் பங்களிப்பு எப்போதும் கிடைத்த வண்ணமுள்ளது. அவர்களின் செயற்பாட்டின் காரணமாகவே, நாம் பணியாற்றுவதற்கு சிறந்த நிறுவனமாக திகழ்கின்றோம்.'' என்றார்.

ஐக்கிய அமெரிக்காவை தலைமையகமாக கொண்டியங்கும் Great Place to Work, உயர் நம்பிக்கை, உயர் வினைத்திறன், பணியிடக் கலாசாரம் ஆகியவற்றில் சர்வதேச அதிகார அமைப்பாக அமைந்துள்ளது. தமது பிரத்தியேகமான மதிப்பீட்டு முறைகள், ஆலோசனை சேவைகள் மற்றும் சான்றளிப்பு நிகழ்ச்சிகள் ஆகியவற்றுடன், பணியிடச்சூழல் வகைப்படுத்தல் மற்றும் மீளாய்வுகள் போன்றன அடங்கலாக, Great Place to Work இனால் சிறந்த பணியிடக் கலாசாரங்களை உருவாக்குவதற்கான நியமங்கள், கட்டமைப்புகள் மற்றும் நிபுணத்துவம் போன்றன வழங்கப்படுகின்றன. Great Place to Work இனால் இலங்கை அடங்கலாக, 57 க்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த வியாபாரங்கள், இலாப நோக்கற்ற அமைப்புகள் மற்றும் அரச முகவர் அமைப்புகள் போன்றவற்றுக்கு நிறைவேற்று ஆலோசனை மற்றும் கலாசார ஆலோசனை சேவைகள் வழங்கப்படுகின்றன.

—###—

**பார்தி எயார்டெல் லங்கா பற்றி**

இலங்கையில் 2009 ஆம் ஆண்டில் தனது சேவைகளுடன், வர்த்தகத் தொழிற்பாடுகளை ஆரம்பித்த பார்தி எயார்டெல் லங்கா நிறுவனம் (''எயார்டெல்''), அதிவேகமாக 1 மில்லியன் வாடிக்கையாளர்களை எட்டிய நிறுவனம் என்ற பெருமையை நிலைநாட்டியிருந்தது. தொழில்நுட்பவியல் புத்தாக்கம் மற்றும் தலைசிறந்த சேவை ஆகியவற்றை எயார்டெல் லங்கா வழங்கி வருவதுடன், இலங்கையில் இளைஞர், யுவதிகள் மத்தியில் மிக வேகமாக இது பிரபலமடைந்து வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இலங்கை முதலீட்டு ஊக்குவிப்புச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள எயார்டெல் லங்கா நிறுவனம், குரல் (voice), தரவு (data) மற்றும் நிறுவன தீர்வுகள் (enterprise solutions) உள்ளடங்கலாக டிஜிட்டல் மொபைல் சேவைகளை வழங்கி வருகின்றது. மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள தயவு செய்து www.airtel.lk என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.